4

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4
MAD

786

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# தன்வீருல் குர்ஆன்

எழுதியது

மௌலவி

K. V. ஷாஹுல் ஹமீது ஆலிம்

(பாக்கவி) நத்தம்.



1950

...பு]  [அணா 6

Q7:21
N50
67912

786

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்

ஹாமிதன் வமுஸல்லியன் வமுஸல்லிமா

# தன்வீருல் குர்ஆன்

எழுதியது


மௌலவீ

K. V. ஷாஹுல்ஹமீது ஆலிம்

(பாக்கவி)

நத்தம்



1950

முதற்பதிப்பு அணா 6

# முன்னுரை

இது காலம் நமது சத்திய இஸ்லாதின் ஐந்து காரியங்களில் இரண்டாவது தொழுகை. அதை நம் முஸ்லிம்களாகிய ஆண்களும் பெண்களும் வழமையாக்கி நடத்துவதை தவிர அதின் கருத்தை விளங்குவதில்லை. ஆகவே ஏழையான கேவலமான யான் தொழுகையின் தக்பீர் முதல் சலாம் வரை இன்னும் பல சூருக்களும் பல துஆக்களும் அவைகளின் பொருள் இன்னும் பல கருத்துகளை ஆண்டவனின் கிருபையால் வெளியாக்கி யுள்ளேன்.

இப்படிக்கு

**K. V. ஷாஹுல் ஹமீது ஆலிம்**

(பாக்கவி) நத்தம்

# கலிமா

## "ஒன்ரும் கலிமா"

லாஇலாஹ இல்லல்லாஹு
முஹம்மது ர்ரசூலுல்லாஹி

## பொருள்

வணக்கத்திற்குரியவர் எவருமில்லை. அல்லாஹ்வை தவிர முஹம்மது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அல்லாஹ்வினதிருத்து துவர்.

## "இரண்டாம் கலிமா"

அஷ்ஹது அன்லாஇலாஹ
இல்லல்லாஹு வஹ்தஹு
லாஷரீகலஹு வஅஷ்ஹது
அன்னமுஹம்மதன் அப்துஹு
வறசூலுஹு

## பொருள்

வணக்கத்திற்குரியவர் வேறு எவருமில்லை. அல்லாஹ்வை தவிர. அவன் தனித்தவன் அவனுக்கு யாரும் இணையில்லை என்றும் உண்மையாக முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அல்லாஹ்வின் அடியாராயும் திருத்து தராயும் இருக்குமென்று சாக்ஷி சொல்கிறேன்.

## "மூன்ரும் கலிமா"

சுபுஹானல்லாஹி வல்ஹம்துலில் லாஹி
வலாஇலாஹ இல்லல்லாஹு
வல்லாஹு அக்பர்
வலாஹௌல வலாகுவ்வத
இல்லாபில்லாஹில் அலிய்யில் அலீம்

## பொருள்

அல்லாஹ் தூய்மையானவன் எல்லா புகழும் அவனுக்கே உடையது. அவனை தவிர வணக்கத்திற்குரியவர் எவருமில்லை. அல்லாஹ் மிக பெரியவன். பாவத்தை விட்டு நீங்குவதும், வணக்கத்தின் பேரில் சக்தி பெறுவதும், கௌரவமும் உயர்வுமுள்ள அல்லாஹ்வின் உதவி கொண்டல்லாது இல்லை.

## "நான்காம் கலிமா"

லாஇலாஹ இல்லல்லாஹு
வஹ்தஹு லாஷரீகலஹு
லஹுல்முல்கு வலஹுல்ஹம்து:
யுஹ்யீவயுமீது: வஹுவ அலாகுல்லி ஷையின்
கதீர்

## பொருள்

வணக்கத்திற்குரியவர் அல்லாஹ்வை தவிர வேறு எவருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாரும் இணையில்லை. அரசாங்கம் அவனுக்குறியது. புகழனைத்தும் அவனுக்குறியது. மௌத்தானவர்களை ஹயாதாக்குவான் இன்னும் ஹயாதானவர்களை மௌதாக்குவான் நன்மை அடங்கலும் அவன் வசமுள்ளது. அவன் எல்லா வஸ்துக்களின் மீதும் சக்தி பெற்றவன்.

## "ஐந்தாம் கலிமா"

அல்லாஹும்ம இன்னீஅஊதுபிக
மின்அன்உஷ்ரிக பிகஷைஅன்
வஅன அஃலமு: வஅஸ் தஹ்பிருக
லிமாலாஅஃலமு இன்னக
அன்த அல்லாமுல்ஹுயூப் துப்து
அன்ஹு வதபர்ரஃது
அன்குல்லிதீனின் சிவாதீனில் இஸ்

லாம் வஅஸ்லம்து வஆமன்து வஅ
கூலு லாஇலாஹ இல்லல்லாஹு
முஹம்மது ர்ரசூலுல்லாஹி

## பொருள்

இறைவனே! யான் அறிந்து உன்னைக்கொண்டு இணை வைக்கிற வஸ்துவை விட்டும், உண்மையாக உன்னிடத்தில் காவல் தேடுகிறேன். அறியாதவைகளுக்காக உன்னிடததில் மன்னிப்புக்கோருகிறேன். உண்மையாக நீ மறைவானவைகளை மிக அறிந்தவன். இணை வைக்கிறதை விட்டு நீங்கிவிட்டேன். சத்திய சன்மார்க்கத்தை தவிர மற்ற மார்க்கத்தை விட்டு நீங்கிவிட்டேன். நான் முஸ்லிமாகி லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மது ர்ரசூலுல்லாஹி என்று சொல்கிறேன்.

**குறிப்பு:**—இதை காலை மாலை ஓதிவருவது எல்லா பாவங்களை விட்டு நீங்குவதற்கு காரணமாக இருக்கும்.

## பாங்கின் விபரங்கள்

(1) அல்லாஹு அக்பர்—நான்கு தடவை
(2) அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்
—இரு தடவை
(3) அஷ்ஹது அன்ன முஹம்மது ர்ரசூலுல்லாஹ்
—இரு தடவை
(4) ஹய்ய அலஸ்ஸலாஹ்—இரு தடவை
(5) ஹய்ய அலல்பலாஹ்—இரு தடவை
(6) அல்லாஹு அக்பர்—இரு தடவை
(7) லாஇலாஹ இல்லல்லாஹ்—ஒரு தடவை

**பொருள்கள்**

(1) அல்லாஹ் மிக பெரியவன்

(2) வணக்கத்திற்குரியவர் இறைவனல்லாது வேறு யாருமில்லை என சாக்ஷி சொல்கிறேன்.

(3) நிச்சியமாக முஹம்மதுநபி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் இறைவனின் திருதூதராக இருக்கும் என சாக்ஷி கூறுகிறேன்.

(4) நீ தொழுகைக்கு வருவாயாக.

(5) நீ ஜெயம்பெற வருவாயாக.

(6) அல்லாஹ் மிகவும் பெரியவன்.

(7) வணக்கத்திற்குரியவர் இறைவனல்லாது வேறு யாருமில்லை.

## விடைகள்

### 1-வது வார்த்தைகளுக்கு விடை :—

இதை கேட்டவர்கள் முஅத்தின் சொல்வதைப்போல் சொல்லிக்கொள்ளவும்.

### 2–வது வார்த்தைகளுக்கு விடை :—

இதை கேட்டவர்கள் முஅத்தின் சொல்வதைப்போல் சொல்லிக்கொள்ளவும்.

### 3–வது வார்த்தைகளுக்கு விடை :—

முதற்தடவையில் ஸல்லல்லாஹு அலைகயாறசூலல் லாஹு, இரண்டாம் தடவையில் கர்ரத்ஐனீ பிகயாறசூலல்லாஹ்.

## இதன் பொருள்

நபி அவர்களே, அல்லாஹ் தங்கள்மீது கருணை காட்டுவானாக. தங்களைக்கொண்டு எனது கண்கள் குளிரக்கடவது.

**4–வது 5–வது வார்த்தைகளுக்கு விடை:—**

வலாஹௌல வலாகுவ்வத
இல்லாபில்லாஹில் அலியில் அலீம்

## இதன் பொருள்

மூன்ருவது கலிமாவில் பார்த்துக்கொள்ளவும்.

**6–வது 7–வது வார்த்தைகளுக்கு விடை :—**

இவைகளை கேட்டவர்கள் முஅத்தின் சொல்வதைப் போல் சொல்லிக்கொள்ளவும்.

1, 2, 6, 7 இவைகளின் பொருள்கள் முன் சென்று விட்டன.

சுபுஹுடைய பாங்கில் அஸ்ஸலாத்து கைரும் மினன் நௌமி என்பதை சேர்க்கவேண்டும்.

## பொருள் :—

தொழுகை தூக்கத்தைவிட மேலானது.

## இதற்கு விடை :—

ஸதக்த வபரர்த வபில்ஹக்கி நதக்த

## இதன் பொருள்

உண்மை சொல்லிவிட்டாய்
நல்ல வார்த்தை சொல்லிவிட்டாய்
நன்மை சொல்லிவிட்டாய்

## பாங்கு துஆ

அல்லாஹும்மறப்ப ஹாதிஹித்த
ஹ்வதித்தாமதிஸ்ஸலாதில் காயிமதி
ஆதிசய்யதிஞ முஹம்மதினில்ல
தில்வஸீலத வல்பலீலத வப்அத்ஹு
மகாமன் மஹ்மூதனில்லதீ வஅத்தஹு
வர்ஜுக்ஞ ஹபாஅதஹு இன்னக
லாதுஹ்ற விபுல்மீஆத்

குறிப்பு :—இந்த துஆவின் ஆரம்பத்திலும் முடிவிலும் ஸலவாத்தை சேர்த்துக்கொள்வது நலம்.

## இதன் பொருள்

இந்த நிறப்பமான பிரார்த்தனை நேமமான கருணையை உடைய அல்லாஹ்வே எங்களுடைய தலைவர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்கு காரணமாய் இருத்தலையும் பெருமையையும் கொடுத்தருள்வாயாக.

நீ வாக்களித்தாயே அவ்வித மான புகளப் பட்ட ஸ்தானத்தில் அவரை எழுப்புவாயாக (கியாமத்துநாளில்) நிச்சயமாக நீ உனது வாக்கை மாற்றம் செய்யக்கூடியவனல்ல.

## தொழுக வேண்டிய விபரங்களும் பொருளுகளும் :—

(தக்பிர்)

அல்லாஹு அக்பர்

### பொருள்

இறைவன் மிக பெரியவன்

(தனு)

சுபுஹானகல்லா ஹும்ம வபிஹம்திக
வதபாரகஸ்முக வத ஆலா ஜத்துக
வலா இலாஹகைருக

### பொருள்

அல்லாஹ்வே, உன்னை தூய்மை படுத்துகிறேன். உன்னை புகழுகிறேன் உனது பெயர் உயர்ந்து விட்டது உனது தலைமைத்தனம் உயர்த்தியாகி விட்டது உன்னையல்லாது வேறு இறைவனில்லை.

(தஅவ்வுத்)

அஊது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர்ரஜீம்

## பொருள்

அல்லாஹுவின் றஹ்மத்தை விட்டு தூரமான ஷைத்தானை நான் கார்மானம் தேடுகிறேன்.

பஸ்மலஹ்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிற்றஹீம்

## பொருள்

இறைவனின் பெயரால் நான் ஆரம்பிக்கிறேன் அவன் உலக மக்கள் அனைவர்களுக்கும் கிருபையாளன் மறுவுலகில் தனக்கு வழிபட்டவர்களுக்குமட்டும் கிருபையாளன்.

(ருகூஉவில்)

சுபுஹான றப்பியல் அலீம்

## பொருள்

கௌரவமான எனது இறைவனை தூய்மை படுத்துகிறேன்.

(சிறு நிலையில்)

சமியல்லாஹுலிமன் ஹமிதஹ்

## பொருள்

புகழ்கிறவனின் புகழை ஆண்டவன் ஏற்றுக்கொள்ளுகிறான்.

றப்பனாலகல்ஹம்து

## பொருள்

சர்வ புகழும் உனக்கேயுடையது.

(சுஜூதில்)

சுபுஹானறைப்பியல் அஃலா

## பொருள்

உயர்த்தியான என்னுடைய இறைவனை தூய்மைப் படுத்துகிறேன்.

## (அத்த ஹிய்யாத்து)

அத்தஹிய்யாத்து வில்லாஹி
வஸ்ஸலவாத்து வத்தைய்யி பாத்து
அஸ்ஸலாமு அலேக்க அய்யு ஹன்ன பிய்யு
வறஹ்மதுல்லாஹி வபரகாத்துஹூ
அஸ்ஸலாமு அலேஞு. வஅலா இபாதில்
லாஹிஸ்ஸாலிஹீன்: அஷ்ஹதுஅன்
லாஇலாஹ இல்லல்லாஹூ: வஅஷ்
ஹதுஅன்ன முஹம்மதன் அப்துஹூ
வறசூலுஹூ.

அல்லாஹும்ம ஸல்லிஅலா முஹம்மதின்
வஅலாஆலி முஹம்மதின்: கமா
ஸல்லேதஅலா இபுறுஹீம: வஅலா
ஆலி இபுறுஹீம: இன்ன ஹமீதுன் மஜீத்.
அல்லாஹும்மபாரிக்: அலாமுஹம்ம
தின்: வஅலா ஆலிமுஹம்மதின்: கமாபா
றக்தஅலா இபுறுஹீம: வஅலா ஆலிஇ
புறுஹீம: இன்னக ஹமீதுன் மஜீத்.
அல்லாஹும் மஹ்பிர்லீ: வலிவாலிதய்ய
வலி உஸ்தாதிய்ய: வலிஜமீஹில்
மூமினீன வல்மூமிஞத்: வல்முஸ்லிமி
னவல் முஸ்லிமாத்: அல்அஹ்யாயி
மின்ஹும் வல் அம்வாத்: இன்னமுஜீ
புத்தஹ்வாத்.

## பொருள்

காணிக்கைகள் கருணேமங்கள யாவும் அல்லாவுக்கே உரியது. நபியவர்களே, இறைவனின் கருணே அருள் தங்கள்மீது உண்டாகக்கடவது. எங்களின் மீதும் இறைவனின் நல்ல அடியார்களின் மீதும் உண்டாகவும். வணக்கத்திற்குரியவர் இறைவனே தவிர வேறு யாருமில்லே. நிச்சியமாக முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலேஹிவசல்லம் இறைவனின் தூதர் என்று நான்

உறுதி கூறுகிறேன். இறைவனே, இபுருஹீம் (அலைஹி) அவர்கள், அவர்களின் குடும்பத்தினர் மீது கருணை காட்டியதுபோல் முஹம்மது நபி சல்லல்லாஹு அலை ஹிவசல்லம் அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினர் கள் மீதும் கருணை காட்டுவாயாக. இபுருஹீம் (அலைஹி) அவர்கள், அவர்கள் குடும்பத்தினர் மீது நல்ல அருள் பாக்கியம் செய்ததைப்போல் முஹம்மது நபி ஸல்லல் லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர்கள் மீதும் நல்ல அருள் பாக்கியம் அருள்வாயாக.

இறைவனே, எனக்கும் எனது தாய் தந்தையர்கள் குருக்கள் மூமினை ஆண் பெண்கள், முஸ்லிமான ஆண் பெண்கள் அவர்களில் உயிருடன் வாழ்பவர்கள் மௌதா னவர்கள் யாவருக்கும் பிழை பொருத்தருள். நிச்சியமாக நீ பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்கிறவனாக இருக்கிறாய்.

**சின்ன துஆ.**

றப்பனா ஆத்தினா பித்துன்யா
ஹசனதவ்: வபில்ஆகி ரதிஹசனதவ்
வகினா அதாபன்னார்

## பொருள்

எங்களுடைய இறைவனே, இவ்வுலகிலும் மறுவுல கிலும் அழகானதை எங்களுக்கு தந்தருள். நரக வேதனையை விட்டு எங்களை காப்பாற்றுவாயாக.

**சலாம் கொடுத்தல்**

அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹ்

## பொருள்

உங்கள்மீது இறைவனின் சாந்தியும் அருளும் உண்டாகுக.

**பெரிய துஆ**

அல்லாஹும்ம இன்னாநஸ் அலுக
ஈமானம் முஸ்தகீமவ் வபலுலன்தா

யிமவ் வநல்றன் றஹ்ற மதவ் வஇல்
மன் நாபிஅன் வஅக்லன்காமிலவ்
வகல்பம் முநவ்வறவ்: வதெளபீகன்
இஹ்சானவ் வதெளபதன் நசூஹா
வஸபுறன் ஜமீலவ் வஅஜ்ரன்அலீ
மவ்: வலிசானன் தாகிரவ் வபதனன்
ஸாபிரன்: வறஸ்கன் வாசிஅன்வ்
வசஹ்ய ம்மஷ்கூரு: வதன்பம்
மஹ்பூரவ் வஅமலம் மஃபூலவ்
வஹு ம்றன் தவீலவ் வவலதன்
ஸாலிஹவ்: வதுஆஅம் முஸ்தஜா
பவ் வஜன்னத் தல்பிர் வெதளவிந
ஹீமா: பிறஹ்மதிகயா அர்ஹ
மற்ருஹிமீன்.

## பொருள்

இறைவனே, நேர்மையான ஈமான் தரிபாடான பெருமை கருணையான பார்வை பிரயோஜனமான கல்வி சம்பூரணமான அறிவு ஒளி பொருந்திய ஹிருதயம் அழகான உதவி பரிசுத்தமான தெளபா குற்றமற்ற பொருமை பிரமாண்டமான கூலி துதிசெய்யும் நாவு பொருமையான சரீரம் விஸ்தீரணமான சாதனம் பாராட்டதக்க முயற்சி பொறுக்கப்பட்ட பாவம் நீண்ட வாழ்கை ஒப்புக்கொள்ளப்பட்ட நடத்தை நன் நடத்தை உள்ள குழந்தை ஒப்புக்கொள்ளப்பட்ட பிரார்த்தனை சுவர்க்க உலகம் யாவையும் உன்னிடத்தில் கேட்கிறோம். கருணைநிதியே உனது கருணையைக்கொண்டு எங்களுக்கு அருள்புரிவாயாக.

### இவ்விடத்தில் சில சூறுகளையும் அதின் பொருள்களையும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

("சூறத்துல் பாத்திஹா")

அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்

அற்றஹ்மா னிற்றஹீம். மாலிகி
யெளமித்தீன் இய்யாக நஃபுதுவ
இய்யாக நஸ்தஈன் இஹ்திநஸ்
ஸிராத்தல் முஸ்தகீம் ஸிறாதல்லதீன
அன்அம்த அலைஹிம் ஹைரில்மஃ
லூபி அலைஹிம் வலல்லாலீன்.

## பொருள்

சர்வ வஸ்துக்களையும் வளர்த்து ரெக்ஷிக்கிறவனுக்கே புகழனைத்தும். உலக மக்கள் அனைவருக்கும் கிருபையாளன். மறுவுலகில் தனக்கு வழிப்பட்டவர்களுக்கு மட்டும் கிருபையாளன். அவனே இறுதி நாளில் தீர்ப்பளிக்கிற அதிபதி. உன்னையே நாங்கள் வணங்குகிறோம். உன்னிடத்தில் உதவிதேடுகிறோம் எங்களுக்கு நேர்மையான வழியை காட்டு (அதாவது) கெட்டவர்களாக உன் கோபத்தில் அகப்பட்ட வர்களின் பாதையல்லாமல் உன் (நிஃமத்) என்ற பாக்கியத்தை அடைந்தவர்களின் பாதையை காட்டு.

## " ஆமீன் "

## பொருள்

அல்லாஹ்வே எங்களது பிரார்த்தனையை ஒப்புக்கொள்.

### " சூறத்துன்னாஸ் "

குல்அஊது பிறப்பின்னாஸ்: மலிகி
ன்னாஸ் இலாஹின்னாஸ்: மின்ஷற்
றில்வஸ்வாஸில் கன்னாஸில்லதி
யுவஸ்விசு பீஸுதூரின்னாஸ்: மின
ல்ஜின்னதி வன்னாஸ்.

## பொருள்

மனிதவர்க்கத்தினரை போஷிக்கக்கூடியவன் அவர்களுக்கு அதிபதியாயுள்ளவன், அவர்களின் வணக்கத்திற்

குறிய இறைவனைக்கொண்டு மனிதர்களின் இருதயங்களில் கலப்பை போட்டு கெடுதி விளைவிக்கும் ஜின்னுகள் மாந்தர்கள் இருவர்களின் தீங்கைவிட்டும் கார்மானம் தேடுகிறேன் என நீங்கள் (நபியே) கூர்வீர்களாக.

### "சூறத்துல் பலக்"

குல்அஊது பிரப்பில்பலக்: மின்ஷர்
ரிமாகலக்: வமின்ஷர்ரி ஹாசி
கின்இதாவகப்: வமின்ஷர்ரின்னப்
பாதாதி பில்ஹுகதி: வமின்ஷர்ரி
ஹாசிதின் இதா ஹசது.

## பொருள்

"அதிகாலையின் நேரத்திற்குடைய இறைவனைக் கொண்டு அவன் சிரிஷ்டித்துள்ள வஸ்துக்கள் இருண்ட இருள் கயிற்றின் முடுச்சில் ஊதும் (சூனியப்) பெண்கள் பொறுமை கொள்ளும் நேரத்தில் பொறுமைகாரர்கள் யாவறின் தீங்குகளை விட்டு கார்மானம் தேடுகிறேன்" என நீங்கள் (நபியே) கூர்வீர்களாக.

### "சூறத்துல் இஃலாஸ்"

குல்ஹு வல்லாஹு அஹது: அல்
லாஹுஸ்ஸமது: லம்யலிது வலம்
யூலது வலம்யகுல்லஹு குபுவன் அஹது

## பொருள்

ஆண்டவன் ஒருவன். அவன் தேவையற்றவன். அவன் ஒருவரையும் பிறவுமில்லை, அவன் பிறப்படவுமில்லை. அவனுக்கு ஒருவரும் சமமாக இல்லை என நீங்கள் (நபியே) கூர்வீர்களாக.

### "சூறத்துல் அபிலஹபு"

தப்பத்எதா, அபீலஹ பிவ்வதப்ப,
மாஅஃனு அன்ஹு மாலுஹு
வமாகஸபு. சயஸ்லானுரன் தாதல

ஹபிவ்வம் ரஅதுஹு, ஹம்மால
தல்ஹதபு: பீஜீதிஹா ஹபுலும்மிம்மஸது

## பொருள்

அபூலஹபு அவனுடைய இரு கைகளும் நாசமாகக் கடவது, அவன் தேடிய பொருள் பெற்ற பிள்ளை யாவும் அவனை தேள்வையற்று வைக்கவில்லை. அவனும் கழுத்தில் ஈத்த மட்டை கயிர் உள்ள விறகு சுமக்கும்அ வனது மனைவியும் சுடர்விட்டெரியும் நரகில் நுழைவார்கள்.

### "சூறத்துல் கத்ரி"

இன்னு அன்ஸல்னஹு பீலைல
த்தில் கத்ரி: வமாஅத்ரூ கமாலை
லத்துல்கத்ரி: லைலதுல்கத்ரிகை
ரும் மின்அல் பிஷஹ்ர்: தனஸ்ஸ
லுல் மலாயிகது வறூஹு பீஹா
பிஇதினிறப்பி ஹிம்மின்குல்லி
அம்றின் சலாம்: ஹியஹத்தா
மத்லஹில் பஜ்ர்.

## பொருள்

நிச்சயமாக நாம் குர்ஆனை கௌரவமுள்ள இரவில் இறக்கிவைத்தோம். அவ்விரவு என்ன, என்று உமக்கு எந்த வஸ்து அறிவித்தது. அவ்விரவு ஆயிர மாதத்தை பார்கிலும் மேன்பாடுளது. ஒவ்வொரு காரியங்களுடன் ஜிப்ரீலும் மற்ற ஏனைய மலக்குகளும் தங்கள் இறைவனின் அனுமதி கொண்டு அவ்விரவில் இறங்குகின்றனர். கிழக்கு வெளுக்கும் வரை அவ்விரவு சாந்தி அளிக்கக் கூடியது.

### ஆயத்துல் குர்சி

அல்லாஹு லாஇலாஹ இல்லா
ஹுவல் ஹய்யுல் கைய்யூம்
லா தகற் குதுஹு ஸினதுவ்வ
லாநௌம்: லஹுமா பிஸ்ஸ

மாவாத்தி வமாபில் அர்லி
மன்தல்லதி எஷ்பஹு இன்தஹு
இல்லாபி இதினிஹி: எஃலமுமா
பைனஐதீஹிம் வமா கல்பஹும்
வலாயுஹீத்தூன பிஷையின்
மின் இல்மிஹி: இல்லா பிமாஷாஅ
வஸிஹ குர்ஸிய்யு ஹுஸ்ஸமா
வாதி வல் அர்லு: வலா எஊது
ஹு ஹிபுலுஹுமா: வஹுவல்
அலிய்யுல் அலீம்.

## பொருள்

வணக்கத்திற்குரியவன் ஆண்டவன், அவனல்லாது வேறு யாருமில்லை. வானம் பூமி இவைகளிலுள்ள வஸ்துகளடங்கலும் அவனுக்கேயுடையன. உயிருள்ளவன் தனது நிலையில் உறுதியுடையவன். தூக்கமும் உறக்கமும் அவனை தொடாது. அவனது அனுமதியின்றி அவனிடம் சிபாரிஷ் செய்பவர் யார்? அவர்களுக்கு முன்னும் பின்னும் உள்ள வஸ்துகளை அறிகிறான். அவனது நாட்டமின்றி அவனது அறிவில் எந்த வஸ்துவையும் கணித்து அவர்கள் அறியமாட்டார்கள். வானம் பூமி இவ்விரண்டிலும் அவனின் அதிகார அமைப்பு பரவி விட்டது. அவ்விரண்டையும் ரெக்ஷித்தல் அவனுக்கு கஷ்டமில்லை. அவன் கௌரவமும் உயர்வு முள்ளவன்.

### "இஸ்திஃபார்"

அஸ்தஃ பிருல்லாஹல் ஹலீ
மல்லதி: லாஇலாஹ இல்லாஹு
வல் ஹய்யுல் கய்யூம்: மின்குல்லி
தன்பின் வகதீஅதின் வஅதூபு இலைஹி.

## பொருள்

வணக்கத்திற்குரியவன் அவனன்றி வேறு எவருமில்லாத உயிருள்ள நிலையான கௌரவமிக்க அல்லாஹு

விடத்தில் சர்வ பாவங்கள் குற்றங்களை விட்டு மன்னிப்பு தேடுகிறேன். நான் அவன் பக்கலே மீளுகிறேன்.

## குனூத் (விட்டுகட்டுதுஆ)

அல்லாஹு~ம்ப இன்ன நஸ்த வீனுக
வநஸ்தஹ்றிக: வநஸ்தஹ்பிருக வந
தூபுஇலைக, வநுத்னி அலைகல்கைறு, குல்
லஹு~ வநஷ்குருக, வலாநக்புருக, வ
நக்லஹு~ வநத்துருகு, மய் எப்ஜு~ருக,
அல்லாஹு~ம்ம இய்யாக, நஹ்புதுவலக,
நுஸல்லி, வநஸ்ஜு~து இலைக, நஸ்ஹா
வநஹ்பிது வநப்ஜு ர்ஹ்மதக வநஃஸா
இன்னஅதாபக ஜித்தபில் குப்பாரிமுல்ஹிக்

## பொருள்

யா அல்லா, நிச்சியமாக உன்னிடத்தில் உதவியையும் நேர்வழியையும் பிழை பொருத்தலையும் நாங்கள் தேடுகிறோம் உன்னளவில் பாவத்தைவிட்டு மீளுகிறோம் உன்னைக்கொண்டு நம்பிக்கை வைக்கிறோம் உன்னை நிர்ணயிக்கிறோம் நலனடங்களும் உனது கைவசமென்பதை துதித்து உனக்கு நன்றி செலுத்துகிறோம் மாற்றம் செய்யமாட்டோம் உனக்கு மாற்றம் செய்கிறவர்களை விட்டு நீங்கிவிடுவோம் யா அல்லா உன்னையே வணங்குவோம் உனக்காக கட்டுப் படுவோம் அடி பணிவோம் குற்றமற நம்பிக்கையுடன் உனது கிருபையையடைய முயற்சிப்பதுடன் நலமான காரியத்தில் தீபரிப்போம் நிச்சியமாகஉனது நரகவேதனைஉன்பகைவர்களை சேரும்

## ரமலான்மாத நோன்பின் நிய்யத்து

நவைத்து சௌமகதின்
அன் அதாயி பர்லி றமலானி
ஹாதி ஹிஸ்ஸனதி லிப்பாஹிதஆலா

### பொருள்

இந்த வருஷ ரமலான் மாத பர்லாகிய நோன்பை நிறை வேற்றுகிறதைக் கொண்டு அல்லாவுக்காக நாளை பிடிக்க நிர்ணயம் செய்தேன்

## நோன்பு திறக்கும்போது ஓதவும்

அல்லாஹு ம்மலகசும்மது, வபிக ஆமன்
து, அலைகதவக்கல்து, வஅலாரிஸ்கிக
அப்தர்த்து, பஃபிர்லி, மாகத்தம்து, வமா
அக்கர்து

### பொருள்

யா அல்லா நான் உனக்காக நோன்பு பிடித்தேன் உன்னைக்கொண்டு ஈமான் கொண்டேன் உன் பேரில் ஆதரவு வைத்தேன் உன்னுடைய ரெஸக்கின் பேரில் நோன்பு திறந்தேன் ஆனதால் நான் முன்பின் செய்துள்ள பாவங்களைபொருத்தருள்.

---

கோவாபரேடிவ் பிரஸ், புதுக்கோட்டை

# முக்கிய கவனிப்பு

முஸ்லீம் சகோதர சகோதரிகளே!

## K.V.S. மலசுத்தி ஹல்வா

இந்த K.V.S. மலசுத்தி ஹல்வா யூனானி முறையில் தயார் செய்யப்பட்டது. தீரும் வியாதிகள் நோட்டீஸில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஹல்வா ஆண், பெண், பாலர் முதல் விருத்தாபியர் வரை எவ்வித பயமின்றி பத்தியமில்லாமல் சாப்பிடலாம். எவ்வளவு காலமிருந்தாலும் எவ்வித கெடுதியுமில்லை. 20-நாள் சாப்பிடும் டப்பி 1-க்கு விலை ரூ 1—0—0.

தயாரிப்பவர் :—

மௌலவீ

**K.V. ஷாஹுல்ஹமீது ஆலிம்**

கிடைக்குமிடம் :—

K.V. ஷாஹுல் ஹமீது ஆலிம்

(பாக்கவி)

நத்தம் P.O.M.D.

கோவாபரேடிவ் பிரஸ், புதுக்கோட்டை.